DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.2/2025 | Deposition of Witness for : PW4 |
| Name : ராஜகோபால் | Father/Husband Name : சொக்கலிங்கம் |
| Age : 50 | Village : தேரியூர் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01 July 2026.

A1 present. A2 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது தேரியூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆவது எதிரியை தெரியும், என்னுடைய அக்காவின் கணவர் ஆவார். 2 ஆவது எதிரியை தெரியும், 1 ஆவது எதிரியின் மருமகன் ஆவார்.

2. கடந்த 16.05.2024 அன்று காலை 9.30 மணியிலிருந்து 10 மணிக்குள் 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் இணைந்து என்னுடைய மனைவி சொக்கலிங்கபுரத்தில் உள்ள என்னுடைய தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த 1 மற்றும் 2 ஆவது எதிரிகள் என்னுடைய மனைவியைப் பார்த்து தோட்டத்தைவிட்டு வெளியே போ தேவடியா என்று அவதூறான வார்த்தைகளால் பேசினார்கள்.

3. 1 ஆவது எதிரி சொக்கலிங்கபுரத்தில் உள்ள என்னுடைய தோட்டத்தை மோசடியாக என்னிடம் இருந்து எழுதி வாங்கிவிட்டார். அதுசம்பந்தமாக குலசேகரன்பட்டினம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுசம்பந்தமாக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனு 1 மற்றும் 2 ஆவது எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு பினை மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. பின் 1 மற்றும் 2 ஆவது எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு 1 ஆவது எதிரி காவல்நிலையத்தில் பிணை பெற்று ஜாமீனில் வெளியே வந்துவிட்டார். என்னுடைய மனைவி இதை 1 மற்றும் 2 எதிரிகளிடம் தெரிவித்தபோது அவர்கள் போலீசாருக்கு நான் பணம் கொடுத்துள்ளேன் என்னை எதுவும் செய்ய முடியாது என எனது மனைவியை மிரட்டினார்கள். நான் எனது மனைவியின் சித்தப்பாவின் இறுதி சடங்கிற்காக சென்னை சென்றுவிட்டேன். மேற்படி சம்பவம் தொடர்பாக என்னுடைய மனைவி எனக்கு போன்மூலம் தகவல் தெரிவித்தார். அதற்கு நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளிக்க கூறினேன்.

4. பின்பு 18.05.2024 அன்று எனது மனைவி மேற்படி தோட்டத்தில் தண்ணீர் பாய்க்கச் சென்றபோது 1 மற்றும் 2 எதிரிகள் மறுபடியும் தோட்டத்திற்குள் நுழைந்து எனது மனைவியை 2 ஆவது எதிரி காலால் எட்டி உதைத்து கீழே



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.01 18:11:55 +0530

தள்ளி என்னுடைய மனைவியின் கையை பிடித்து முறுக்கினார், அதற்கு 1 ஆவது எதிரியும் உடந்தையாக இருந்தார். 1 மற்றும் 2 எதிரிகள் அந்த இடத்தை விட்டு செல்லும் போது உன்னையும் உனது கணவனையும் கொன்று புதைத்துவிடுவோம், உங்கள் இருவரின் உயிரும் எங்கள் கையில் தான் உள்ளது என்று கூறி கொலைமிரட்டல் விடுத்தனர்.

5. பின்பு என்னுடைய மனைவி காயம்பட்டதற்காக உடன்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று பின்பு காவல்நிலையம் வந்து புகார்மனு அளித்தார். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னுடைய மனைவி நடந்த சம்பவத்தை எனக்கு போன்மூலம் தெரிவித்தார். தற்போது வரை 1 மற்றும் 2 ஆவது எதிரிகளால் எனது மற்றும் எனது மனைவியின் உயிருக்கு ஆபத்து உள்ளது, தற்போதுவரை 1 மற்றும் 2 ஆவது எதிரிகள் நாங்கள் வெளியில் செல்லும்போது எங்களைப் பார்த்தால் முறைத்து கொண்டும், சைகை காட்டிக்கொண்டும் இருக்கிறார்கள்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

6. ஆஜர் 1 ஆவது எதிரி என்னுடைய தோட்டத்தை மோசடியாக எழுதி வாங்கிக்கொண்டதாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன், அந்த தோட்டத்தை அவர் கிரைய ஆவணம் மூலம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டேன், கிரையத்திற்கு 1 ஆவது எதிரியிடம் கொடுத்துவிட்டேன் என்றும் அனுபவத்திற்கும் கொடுத்துவிட்டேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த கிரைய பத்திரமானது மோசடியானது ஆகும். இன்றைய தேதிவரைக்கு நான் கொடுத்த கிரைய பத்திரமானது மோசடியானது, சட்டப்படி செல்லுபடி ஆகாது என்று எந்தவொரு நீதிமன்றத்தாலும் அறிவிக்கப்படவில்லை என்றால் சரிதான், மோசடி வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, எதிரிகள் வாய்தாவிற்கு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மேற்படி தோட்டத்திற்கு எதிரி தனது பெயருக்கு தோட்டத்தின் பட்டாவை மாற்றித்தர வேண்டும் என கோரிய மனுவிற்கு நான் ஆட்சேபணை செய்ததால் அந்த மனுவானது நிறுத்துவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. 18.05.2024 அன்று என்னுடைய மனைவி அ.சா.1 மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தில் 1 ஆவது எதிரியின் வண்டி சாவி, செல்போன் ஆகியவற்றை கொடுத்து, அதை 1 ஆவது எதிரி எழுதி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். நான் 18.05.2024 அன்று சென்னையில் இருந்தேன் என்றால் சரிதான். 16.05.2024 அன்றிலிருந்து மே மாதம் முழுவதும் அ.சா.1 ஊரில் தான் இருந்தார் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த காலத்தில் இருந்தே தோட்டத்தின் அனுபவம் 1 ஆவது எதிரி ஜெயக்குமார் என்பவரிடம் தான் இருந்து வருகிறது என்றும், 1 ஆவது எதிரி கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்கும் நோக்கத்தோடு இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. 1 ஆவது எதிரி ஜெயக்குமார் என்பவர் மோசடியாக சொத்தை எழுதி வாங்கிவிட்டார் என்று நான் கூறுவது பொய் என்றாலும் சென்னையில் உள்ள வேறு சொத்துக்களில் உள்ள பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

1 ஆவது எதிரிக்கு கிரையம் 2024 ஆம் வருடம் மார்ச் மாதம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான்.

9. 2 ஆவது எதிரி அ.சா.1 ன் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளினார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தோட்டத்திற்குள் வந்து அ.சா.1 ஐ வெட்டி புதைத்துவிடுவேன் என்று கூறினார்கள் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நானும் என்னுடைய மனைவி அ.சா.1 ம் கூறுவது போன்று 1,2 எதிரிகள் எந்த குற்ற சம்பவத்தையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 16.05.2024 அன்று நானும், அ.சா.1 ம் தோட்டத்திற்குள் நுழைந்து கெட்டவார்த்தைப் போட்டு கொலைமிரட்டல் விடுத்தாக 1 ஆவது எதிரி புகார் கொடுத்து அதன்பேரில் நாங்கள் விசாரணைக்கு சென்றோம் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.01 18:12:08 +0530

Judicial Magistrate, Sathankulam.